10.04.2026
O.S.No. 12/2019
PW1– கரடிமுத்து – த/பெ. முத்தையா முதலியார்
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.04.2026

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதிகள் தரப்பில்)

1. வா.சா.ஆ.5 ஆவணம் குருசாமி என்றநபரால் 1,2 பிரதிவாதிகளுக்கு எழுதிவைக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட சொத்தானது வழக்கு சொத்தின் கீழோரப்பகுதி என்றால் சரிதான். குருசாமி எனது உறவினராவார்.

2. குருசாமி , சித்திரைக்கண்ணு(எனது சித்தப்பா) முதலியாரிடமிருந்து மேற்படி வா.சா.ஆ.5 சொத்தை கிரையம் வாங்கினார். சித்திரைக்கண்ணு முதலியார், குருசாமிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் பாதை எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்தின் மேல்பகுதி 2 செண்ட் முழுவதும் நான் எனது மகனுக்கு நன்கொடையாக கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். இப்போது வழக்குச்சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். எனவே நான் வழக்கில் கோரிய எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**